<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 173/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W. 1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கார்த்திக் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | மதிவாணன் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 20.09.2025.

<u>முதல் விசாரணை</u>

1. நான் உடுமலைப்பேட்டை சங்கர் நகரில் வசித்து வருகிறேன். டிரைவராக வேலை செய்து வருகிறேன். கடந்த 10.04.2025 ம் தேதி நானும் என் நண்பர் முகமது சபிர் என்பவரும் அயலுமீனாட்சி நகரில் உள்ள ஜிம்முக்கு சென்றுவிட்டு வந்து கொண்டிருந்த போது போலிசார் அயலு மீனாட்சி நகர் பஸ்ஸ்டாப் அருகில் சோதனை செய்து கொண்டிருந்தார்ள் அப்போது அவரது பைக்கில் ஒரு இரும்பு ராடு இருந்ததால் அந்த நபரை எங்கிருந்து வருகிறிர்கள் என்ன என்று அவரை விசாரித்து கொண்டிருந்தார்கள். என் முன்னிலையில் அவரை விசாரித்தார்கள். போலிசார் எங்கள் இருவரிடமும் அந்த நபரை விசாரிப்பதாகவும் அதற்கு சாட்சியாக இருப்பதாகவும் கேட்டார்கள். எங்கள் பகுதியில தொடர்ந்து திருட்டு நடப்பதால் போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க அவர்களுக்கு உதவியாக சாட்சியாக இருப்பதாக சொன்னோம். அதன்பிறகு போலிசார் விசாரணை மேற்கொண்டார்கள். அவர்பெயர் திவான் (எ) சுப்பிரமணியன் என்றும் கோயம்புத்துா் செட்டிபாளையத்தை சேர்நதவர் என்றும் சொன்னார்.

2. உடுமலைப்பேட்டையில் மின் நகர் , அண்ணாமலையார நகர், UKP அக்சயா கார்டன் , TMS லேஅவுட், கணபதி பாளையம், வெற்றி அவென்யு, பிரபு நகர், இந்திரா நகர் ஆகிய பகுதிகளில் ஆளில்லா வீட்டில் வீடு புகுந்து திருடியதாக குற்றததை ஒப்புக் கொண்டு வாக்குமூலம் கொடுத்தார். பின்னர் போலிசார் அவர் சொன்ன வாக்குமூலத்தை லேப்டாப்பில பதிவு செய்து பிரிண்ட் அவுட் எடுத்து வந்து எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். 8 பக்கம் கொண்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் அனைத்து பக்கத்திலும் திவான் (எ) சுப்பிரமணி என்பவர் கையொப்பம் செய்தார். நாங்கள் கடைசி பக்கத்தில் சாட்சி கையொப்பம் செய்தோம். பின்னர் பிளாட்டினா இரு சக்கர வாகனம் இரும்பு ராடை கைப்பற்றியதற்காக கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நாங்கள் சாட்சி கையொப்பம் செய்தோம்.
3. 8 வீடுகளில் (1). மின்நகரில் 1 பவுன் தங்க காயின்–1, ¼ பவுன் தங்க மோதிரம் –1, (2). அண்ணாமலையார் நகரில் ½ பவுன தங்க காயின்–2 ¾ பவுன் தங்க தோடு–1 1 பவுன் தங்க மோதிரம் –1, (3). UKP அக்சயா கார்டனில் 2 பவுன் தங்க வளையல் –2, 1 ¼ பவுன் தங்க வளையல் –1 1 பவுன் தங்க பிரேஸ்லேட் –1 ¼ பவுன் தங்க தோடு–1 2 பவுன் தங்க தோடு –2 ஜோடி. (4). TMS லே அவுட்டில் 3 பவுன் தஙக நெக்லஸ்–1, ½ பவுன் தங்க காயின்–1, தங்க தாலிகுண்டு –2 தங்க தாலி காசு இரண்டும் சேர்ந்து 1 பவுன். தங்கமூக்குத்தி –3 ¼ பவுன் உடையது. (5). கணபதிபாளையத்தில் 2 பவுன் தங்க செயின் –2 , 1 ½ பவுன் தங்க மோதிரம் –2 1 பவுன் தங்க தோடு –1, வெள்ளி குத்து விளக்கு –1 சுமார், வெள்ளி விநாயகர் –1. (6). பிரபு நகரில் வெள்ளி கொலுசு –2 ஜோடி, குழந்தை வெள்ளி கொலுசு –2 ஜோடி வெள்ளி குங்குமச்சிமிழ்–1, வெள்ளி சந்தனக்கிண்ணம்–1 , வெள்ளி பவுல்–1 , வெள்ளி ஸ்பூன்–1 (7). இந்திரா நகரில் 3 பவுன் தங்க செயின்–1 குழந்தை தஙக செயின் 2 பவுன் –2 தங்கதோடு 4 ஜோடி, வளையல் –1 ஜோடி 3 ½ பவுன், கொக்கியில்லாத தாலி கொடி 4 ¼ பவுன்–1, (8). வெற்றி அவென்யு ¼ தங்கதோடு –2, ½ பவுன் தங்க மோதிரம் –2, ரொக்கம் ரூபாய் 10000/–. மேற்படி பொருட்களை செட்டி பாளையம் தனது வீட்டில் வைத்திருப்பதாக அவர் போலிசாரிடம் சொன்னார். உடனே நாங்கள் போலிசார் அழைத்து சென்றதன் பேரில் ஆஜர்படுத்துவதாக கூறியதால் போலிசார் எங்களையும் அழைத்து கொண்டு கோயம்புத்தூர் செட்டிபாளையததில் உள்ள அவரது வீட்டிற்கு சென்று திவான் (எ) சுப்பிரமணியன் என்பவர் தனது வீட்டின் செல்பில் இருந்து நகைகளை எடுத்து ஆஜர் செய்தார்.

வெற்றி அவென்யூ நகரில் திருடிய நகைகளை மட்டும் பித்தளை பொருட்கள் இருப்பதாக கருதி ஆமந்த கடவு ஆற்றில் வீசியதாகவும் மேலும் ரொக்கம் 10000/- பணத்தை சூதாடி செலவு செய்ததாகவும் திவான் (எ) சுப்பிரமணியன் சொன்னார். கோயம்புத்தூர் செட்டி பாளையத்தில் நகைகளை கைப்பற்றியதற்காக தயார் செய்யப்பட்ட மகசரில் நாங்கள் இருவரும் தனித்தனியாக கையொப்பம் செய்தோம்.

4. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது கையெழுத்து மட்டும் அசா.ஆ.1 என குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் நகைகளின் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான்.**கைப்பற்றுதல் மகசர் அசா.ஆ.2 என குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நகை தான் இந்திரா நகரில் கைப்பற்றிய நகைகள் ஆகும். **அந்த புகைப்படம் அசா.ஆ .3 என குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் இரும்பு ராடு மற்றும் இரு சக்கர வாகனம் கைப்பற்றியதற்காக கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். **அந்த கைப்பற்றுதல் மகசர் அசா.ஆ.4 என குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. டிரைவரில் வேலை நேரம் என்றால் ஒப்பந்த முறையில் TNEB ல் காண்டிராக்ட் டிரைவராக உள்ளேன். பொதுவாக TNEB ல் டிரைவர் பணி என்பது காலை முதல் மாலை வரை இருக்கும் என்றால் சரிதான். உங்கள் நண்பர் என்ன வேலை செய்துவருகிறார் என்றால் பேக்கரியில் வேலை செய்து வருகிறார் என்ன பேக்கரி, எங்கு என்றால் தெரியாது எனது ஏரியாவில் பழக்கம். ஜிம்மிற்கு போனதாக சொல்லியுள்ள நிலையில், ஜிம்மின் பெயர் என்ன என்றால் ராயல் பிட்னஸ் ஜிம். ஜிம்முக்கு வந்து பொதுவாக எத்தனை மணிக்கு சென்று எத்தனை மணிக்கு வருவீர்கள் என்றால் காலையில் போவேன், மாலையிலும் போவேன், ஜிம்மிற்கு ஒர்க் அவுட் செய்ய செல்லவில்லை, ஜிம்மிற்கு நண்பரை பார்க்க சென்றேன்.
2. போலீசாரை பார்த்ததாக சொல்லியுள்ள நிலையில் எத்தனை போலீசார் இருந்தார்கள். என்னென்ன வாகனத்தில் வந்திருந்தார்கள் என்றால் பொலிரோ ஜீப்பில் இன்ஸ்பெக்டர் மற்றும் 3 போலிசார் இருந்தார்கள். அனைவரும் ஆண் போலிசார் என்றால் ஆமாம். போலிசார் அங்கு என்ன வாகனம் சோததனைசெய்து கொண்டிருந்தார்கள என்றால்

ஆமாம். எத்தனை வாகனம் சோதனைக்காக நின்று இருந்தது என்றால் 6 இரு சக்கர வாகனம், 1 டாட்டா ஏஸ் வாகனம் இருந்தது, தோராயமாக சொல்கிறேன் சரியாக தெரியவில்லை. அன்றைய தினம் சரியான ஆவணங்கள் இல்லாத வாகனத்திற்கு பைன் போட்டுக் கொண்டிருந்தார்களா என்றால் ஆமாம் எல்லாரையும் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். சங்கர் நகர் பஸ் ஸ்டாப் என்பது இரண்டு பேருந்து நிறுத்தங்கள் உள்ளன என்றால் ஆமாம். அய்யலுமீனாட்சி நகரிலும் 2 பேருந்து நிறுத்தங்கள் உள்ளது என்றால் ஆமாம். அயலு மீனாட்சி நகரில் ரோட்டுக்கு கிழப்புறம் ஒரு பேருந்து நிறுத்தம் ரோட்டுக்கு மேற்புறம் ஒரு பேருந்து நிறுத்தம் உள்ளன என்றால் ஆமாம். பிளாட்டினம் இருசக்கர வாகனம் என்று சொல்லியுள்ள நிலையில் அதனுடைய மாடல் மற்றும் பதிவின் தெரியுமா என்றால் மாடல் தெரியவில்லை பதிவெண் தெரியும் TN 38 BE 1609 ஆகும். அதன் எஞ்சின் நம்பர், சேஸ் நம்பர் தெரியுமா என்றால் தெரியாது. அதனுடைய எஞ்சின் நம்பர் மற்றும் சேஸ் நம்பர் உங்களுக்கு தெரிந்ததாக உங்களது வாக்குமூலத்தில் இருந்தால் அது உங்களது உங்களால் கொடுக்கப்பட்ட வாக்குமூலம் அல்ல என்றால் ஆமாம்.

3. 7–8 இடத்தில் நகைகள் திருடுபோனதாக சொல்லியுள்ள நிலையில் மேற்படி வீடுகளில் உள்ளவர் வசிப்பவர்கள் உங்களது நண்பர்கள் அல்லது உறவினர்களா என்றால் இல்லை. அயலு மீனாட்சி நகர் பஸ் ஸ்டாப் அருகில் போலீசார் நின்றதாக சொல்லியுள்ள நிலையில் 7 வாகனங்கள் தாண்டி எத்தனை நபர்கள் கூட்டமாக நின்று கொண்டிருந்தார்கள் என்றால் சுமார் 25 நபர்கள் இருந்தார்கள்.
4. நீங்கள் போவதற்கு முன்னரே போலிசார் டைப் செய்து கொண்டிருந்தார் என்றால் நான் ஜிம்முக்கு 10 மணிக்கு செல்லும் பொழுது கூட்டமாக இருந்தது என்றாலும் அப்பொழுது செல்லும் பொழுதும் டைப் செய்து கொண்டிருந்தார்கள் என்றாலும் ஜிம்முக்கு சென்று திரும்பி வரும் பொழுதும் டைப் செய்து கொண்டிருந்தார்கள் அதில் நீங்கள் கையொப்பம் செய்தீர்கள் என்றாலும் ஆமாம். எங்கு வைத்து பிரிண்ட் எடுத்தார்கள் என்ற விவரம தெரியாது என்றால் சரிதான்.
5. லேப்டாப்பில் இருந்து எதன் மூலம் பதிவிறக்கம் செய்து பிரிண்ட் எடுக்க சென்றார்கள் என்ற விபரம் தெரியாது என்றால் பென்டிரைவில் செய்தார்கள். பிரின்ட் எடுப்பதற்கு யார் சென்றார்கள் என்ற போலீசாரின் விபரம் தெரியுமா என்றால் ஒரு போலிசார் சென்றார் இன்ஸ்பெக்டர் மற்றும் இரு போலீசார் எங்களுடன் இருந்தார்கள். சென்ற போலிசார் எவ்வளவு நேரம் கழித்து திரும்ப

வந்தார் என்றால் 45 நிமிடம் கழித்து வந்தார். நீங்கள் மொத்தமாக அந்த இடத்தில் சுமார் ஒரு மணி நேரம் இருந்திருப்பீர்கள் என்றால் ஆமாம்.

6. நீங்கள் மொத்தமாக எத்தனை கையெழுத்து அந்த இடத்தில் போட்டீர்கள் என்றால் இரண்டு கையெழுத்து போட்டேன். நீங்கள் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று குறிப்பிட்டு தெரியாது என்றால் படித்துக் காண்பித்தார்கள். அவர்கள் படித்துக் காண்பித்தார்களா என்றால் ஆமாம். கோவைக்கு என்னென்ன வாகனங்களில் சென்றீர்கள் என்றால் பொலிரோ கார் காரில் போனேன். அய்யலு மீனாட்சி நகரில் 200 மீட்டரில் கிராம நிர்வாக அலுவலரின் அலுவலகம் உள்ளது, சிவசக்தி காலனியில் பஞ்சாயத்து அலுவலகம் உள்ளது என்றால் ஆமாம்.
7. கோவைக்கு சென்றதாக சொல்லியுள்ள நிலையில் என்ன என்ன வழியில் கோவைக்கு சென்றிர்கள் என்றால் உடுமலை – பொள்ளாச்சி, பொள்ளாச்சி – ஒத்த கால் மண்டபம் வழியாக வலதுபுறமாக செட்டிபாளையம் சென்றோம். எதிரியின் வீடு எந்த திசையை நோக்கிய வீடு என்றாலும் எத்தனை அறைகள் உள்ளது என்றாலும் திசை கவனிக்கவில்லை. எத்தனை அறைகள் என்று தெரியவில்லை இரண்டு அறைகள் என நினைக்கிறேன். குறிப்பிட்டு எத்தனை அறை என்று தெரியாது என்றால தெரியாது, உள்ளே சென்றவுடன் ஹாலிலேயே நின்றுவிட்டேன். போலீசாரும் உள்ளே வந்தார்கள் என்றால் ஆமாம். எவ்வளவு நேரத்தில் உடுமலைப்பேட்டை வந்தீர்கள் என்றால் போக ஒரு மணி நேரம், வர ஒரு மணி நேரம், அங்கே ஒரு அரை மணி நேரம் இருந்திருப்போம். எதிரி வீட்டிற்கு சென்றதாக சொல்லியுள்ள நிலையில் எதிரி வீட்டிற்கு வலது புறம், இடது புறம் மற்றும் எதிர்ப்புறம் என்ன உள்ளது என்றால் தெரியாது.
8. 7–8 வீடுகள் என்று சொல்லி உள்ள நிலையில் நகைகள் காணாமல் போனதாக சொல்லிய நகைகளின் அளவுகள் அளவிடப்படாமல் அளவுகள் குறித்து நீங்கள் சொல்லியுள்ள நிலையில் அவைகள் அளவிடாமல் போலீசார் சொல்லியதன் பெயரில் தான் சொல்கிறீர்கள் என்றால் ஆமாம். மொத்தமாக இந்த வழக்கிற்காக எத்தனை கையெழுத்து போட்டீர்கள் என்றால் செட்டிபாளையம் சென்று ஏழு கையெழுத்துப் போட்டேன். மொத்தமாக இந்த வழக்கிற்காக எட்டு கையெழுத்து போட்டுள்ளேன். இந்த வழக்கிற்காக போடப்பட்ட மொத்த எட்டு கையெழுத்துக்களும் உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் வைத்து இந்த

வழக்கிற்காக உங்களால் போடப்பட்டது என்றால் இல்லை.

9. நீங்கள் கோவைக்கு சென்றதாகவும் வழக்கு சொத்துக்கள் எதிரியின் வீட்டில் கைப்பற்றியதாகவும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்றாலும் உண்மையில் அங்கு சென்று இருந்தீர்கள் என்றால் எதிரியின் வீடு மற்றும் இயற்கை அமைப்பை குறித்து குறிப்பிட்டிருப்பீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் இதற்கு முன்பு நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளீர்கள் என்றால் இல்லை. அன்றைய தினம் போலீசார் உடன் நீங்கள் இருந்ததாக கூறுவது இரண்டு மணி நேரம் தான் என்றால் ஆமாம்.

10. கோவை சென்று வந்ததாக சொல்லியுள்ள நிலையில் எந்த இடத்தில் உங்களை இன்ஸ்பெக்டர் இறக்கி விட்டார் என்றால் காவல் நிலையத்தில். அங்கு இறக்கி விட்ட பிறகு சம்பந்தப்பட்ட போலீசாரே நீங்கள் பார்க்கவில்லை என்றால் ஆமாம்.

11. எதிரி உங்கள் முன்னிலையில் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் வழங்கவில்லை என்றாலும் அயலும் மீனாட்சி நகரில் எந்த ஒரு பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் போலீசாரின் கையிருப்பு சாட்சி என்பதால் மேற்படி கையெழுத்துக்களை காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து உள்ளீர்கள் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. எதிரி மளிகை கடை வேலை செய்து வருகிறார் என்றாலும் போலிசாரால் புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட பொய்யான வழக்கிற்கு பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-T.Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.